யாழ்ப்பாணக் கல்வி வலயம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை

ஆசிரியர் - ம.விமலேஸ்வரன் - யா/சென்பெனடிக்ற் வித்தியாலயம் நேரம்-1 மணி 15நிமிடம்

01. தரப்படும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

மர வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு பெருகிவரும் நேரம் இது. மரங்கள் மனித குலத்துக்குச் செய்து வரும் நன்மைகள் கணக்கில் அடங்காதவை. மரங்கள் நிறைந்த காடுகள் மழைப்பொழிவினை உண்டாக்கும். அசுத்த வாயுவான கரியமில வாயுவை நாம் உட்கொண்டு மனிதர்களுக்குத் தேவையான ஒட்சிசனை மரங்கள் வெளியிடுகின்றன. சாலை ஓரங்களில் நிற்கும் மரங்கள் நிழல் கொடுத்துப் பயணத்தை இனிமையாக்குகின்றன. உணவாகும் பல காய்களையும் கனிகளையும் மரங்கள் அள்ளித் தருகின்றன. வனவிலங்குகள் வாழும் இடங்களாக விளங்குபவை அடர்ந்த மரங்கள் சூழ்ந்த காடுகளே! நம் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பலவும் தருவது மரங்களே! இறப்பர், மூலிகைகள், வீட்டுக் கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றை மரங்கள் தருகின்றன. பறவைகள் கூடுகட்டி வாழ்வதற்கு வாடகை வாங்காமல் இடம் தந்து உதவுகின்றன. மரங்களின் பட்டைகள், இலைகள், வேர்கள் எனப் பலவும் மருந்துப் பொருட்களாகவும் பயனாகின்றன. எனவே வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்! நம் எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருதி மர வளர்ப்பில் ஈடுபடுவோம்!

1. பந்தியில் கூறப்பட்ட விடயம் யாது?

   .....

2. மழைப் பொழிவினை உண்டாக்குபவை எவை?

   .....

3. வீதி என்பதைக் குறிக்கும் சொல்லைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக?

   .....

4. பந்தியில் இடம்பெறும் எதிர்க்கருத்துச் சோடிச் சொற்களை எழுதுக?

   .....

5. மரங்கள் தாம் எந்த வாயுவை உட்கொள்கின்றன?

   .....

6. 'இனிமையாக்குகின்றன' என்பதைப் பிரித்து எழுதுக?

   .....

(6x1 = 6)

02. பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1. அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே
2. ஐயா பேருந்து நின்று விட்டதே (2x1 = 2)

www.lkedu.lk

03. சரியான சொல்லைத் தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ……..…… ஆகும். (பனி, பணி)
2. ஆற்றிலே போட்டாலும் ……..……போடு (அளவறிந்து, அலவறிந்து)
3. மலையகமெங்கும் …… பரவிக் காணப்பட்டது. (பனிமூட்டம், பணிமூட்டம்)
4. சிறுவன்…… தாங்க முடியாமல் கத்தினான். (வலி, வழி, வளி)

(4புள்ளிகள்)

04. ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. புறா பறந்து சென்றது.

   ……

2. நட்சத்திரம் வானில் மின்னியது.

   ……

(2புள்ளிகள்)

05. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1. நண்பர்கள் உயர்திணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும் ( )
2. புத்தகம் அ.்றிணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும் ( )
3. புத்திஜீவிகள் உயர்திணைப் பன்மைப் பெயர்ச் சொல்லாகும் ( )
4. நீதிபதி உயர்திணை ஆண்பால் ஒருமைச் சொல்லாகும் ( )

(4புள்ளிகள்)

06. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

1. அஞ்சல் நிலையத்தினால்/வகையான/பல/நாம் அடைகின்றோம் /நன்மைகளை

   ……

(1புள்ளிகள்)

07. பின்வரும் உவமைத் தொடர்களின் கருத்தை எழுதுக.

1. பசுந்தோல் போர்த்திய புலி போல.

   ……

2. உள்ளங்கை நெல்லிக்கனி போல

   ……

(2புள்ளிகள்)

08. பின்வரும் மூதுரைப் பாடலைப் பூர்த்தி செய்க

நல்லாரைக் ……..…… நன்றே நலமிக்க

நல்லார் சொல் …….…… நன்றே நல்லார்

குணங்கள் …… தன்றே அவரோடு இணங்கியிருப்பதும் நன்று.

(3புள்ளிகள்)

www.ikeau.lk

09. பின்வரும் ஆங்கில வாக்கியத்துக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக?

1. What is this animal?……..
2. I have two legs. ……


(2புள்ளிகள்)


10. தமிழ்க் கருத்துக்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. உங்களால் பாட முடியுமா? ……
2. நாங்கள் போவோம் ……

(2புள்ளிகள்)

11. பின்வரும் படங்களுக்குரிய பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.





i. …… ii. ……...

(2புள்ளிகள்)

12. தரப்பட்ட சிங்களச் சொற்களுக்குரிய கருத்தை தமிழில் எழுதுக.

1.இரிதா -……

2.கிரிடா பூமிய –……

(2புள்ளிகள்)

13. பின்வரும் தமிழ்ச் சொல்லுக்குரிய சிங்கள உச்சரிப்பை எழுதுக.

பென்சிலைத் தாருங்கள். ……

(1புள்ளிகள்)

14. பல மாதங்கள் பாடசாலை செல்லாத மாணவன் நீண்ட நாட்களுக்குப் பின்னர் பாடசாலைக்குச் செல்லும் போது, ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்தி நீங்கள் அந்த மாணவன் எனக்கருதி கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. *(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாமலும், எழுத்துக் கூட்டல், எழுவாய், பயனிலைத் தொடர்பும் சரியாக இருத்தல் வேண்டும்)*

……

……

……

……

……

……

(6புள்ளிகள்)

www.lkedu.lk

- **15 தொடக்கம் 29 வரையான வினாக்களுக்குச் சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

15) தொண்ணூற்றொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

16) 87635 எனும் எண்ணுடன் 65 ஐக் கூட்டிய பின்னர் கிடைக்கும் விடையின் நூறாமிடத்துப் பெறுமானம் யாது?

.....

17) தென்னந்தோப்பு ஒன்றில் பறிக்கப்பட்ட 9005 தேங்காய்களில் 3998 தேங்காய்கள் விற்பனைக்கு உதவாதவை எனில் நல்ல தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

18) ஒரு தோட்டத்தில் பறிக்கப்பட்ட மாங்காய்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

திங்கள்	165
செவ்வாய்	130
புதன்	180
வியாழன்	230
வெள்ளி	470


i. மிகக் குறைவாக மாங்காய்கள் பறிக்கப்பட்ட நாள் எது?

.....

ii. ஐந்து நாட்களிலும் பறிக்கப்பட்ட மாங்காய்களின் மொத்த எண்ணிக்கை?

.....

19) **7569, 7558, 7547**, ... அடுத்து வரும் எண்ணை எழுதுக.

20)  அருகே உள்ள உருவில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன? .....

21) 816 கொப்பிகளை ஒருவருக்கு 4 வீதம் கொடுத்தால் எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்.?

.....


22) ஒன்று ரூபா 85.00 வீதம் 5 தேங்காய்களை வாங்கிக் கொண்டு ரூபா 500.00 தாள் காசு ஒன்றையும் ரூபா 20.00 தாள் காசு ஒன்றையும், ரூபா 5.00 நாணயக் குற்றி ஒன்றையும் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

.....

23) 18 என்ற எண்ணை உரோமன் எண்ணில் ஆக்கும் போது எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.

.....


www.lkedu.lk

24) 

இங்கே இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 1 cm ஆகும் எனில் இவ் உருவின் பரப்பளவானது எத்தனை முழுக்கட்டங்களுக்கு சமனானதாகும்.....


25) 12 மனிதர்கள் 5 நாட்களில் செய்யும் வேலை ஒன்றை 10 மனிதர்கள் 4 நாட்களில் செய்த பின்னர் மீண்டும் 10 மனிதர்கள் அவ்வேலையில் இணைந்து கொண்டனர் எனில் எஞ்சிய வேலையை செய்து முடிக்க எத்தனை நாட்கள் எடுக்கும்.

.....

26) 

I. தரப்பட்ட திண்ம உருவின் பெயர் யாது? .....

II. இவ் உருவில் காணப்படும் மேற்பரப்புக்கள் எத்தனை? .....

27) 

I. உருவில் நிழற்றப்படாத பகுதியைப் பின்னத்தில் எழுதுக. .....

II. நிழற்றிய பகுதியைத் தசமத்தில் தருக. .....

28) ஒரு விளையாட்டுப் போட்டியில் ஆனந்தன் நீளம் பாய்தல் நிகழ்வில் 1m 45 cm தூரம் பாய்ந்தான். வாணன் அவனைவிட 18cm தூரம் அதிகமாகப் பாய்ந்தான் எனில் இருவரும் பாய்ந்த மொத்தத் தூரம் எவ்வளவு?

.....

29) 18l கொள்ளளவு கொண்ட தொட்டி ஒன்றில் 6625 ml நீர் இருந்தது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு தேவையான நீரின் அளவை லீற்றர் மில்லி லீற்றரில் தருக. .....

(15x2=30 புள்ளிகள்)

www.lkedu.lk

- **30 தொடக்கம் 59 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30) உள்மூச்சு வெளி மூச்சுவிடல் தியானச் செயற்பாட்டின் எந்தப் படிநிலையில் அடங்கும்?
1. பிரார்த்தனை 2. உடலைத் தளர்த்தல் 3. மலர்வு

31) காற்றினால் பரவும் வித்துக்களில் அடங்காதது.
1. பருத்தி 2. தேங்காய் 3. எருக்கலை

32) பௌத்தர்களின் புனித நூலாக அமைவது,
1. ஜாக்பெல் 2. திரிபீடகம் 3. பகவத்கீதை

33) தேசிய கீதம் இசைக்கப் பொருத்தமான நேரம்
1. தேசியக் கொடி ஏற்ற முன்பு
2. தேசியக் கொடி ஏற்றிய பின்பு
3. தேசியக் கொடி இறக்கிய பின்பு

34) இலங்கையில் படிகைக்கல் மலை அமைந்த மாவட்டம்
1. பொலனறுவை 2. கண்டி 3. அனுராதபுரம்

35) பின்வருவனவற்றுள் சமாந்தர நரம்பு அமைப்பைக் கொண்ட இலை உள்ள தாவர வகையில் அடங்காதது?
1. தென்னோலை 2. மாவிலை 3. சோளம்

36) கதிர்களை உருவாக்கும் தவாரத்தில் அடங்குவது?
1. சோளம் 2. வாழை 3. குரக்கன்

37) வசந்தகாலப் பறவை என அழைக்கப்படும் பறவை எது?
1. புளுனி 2. காகம் 3. குயில்

38) செவ்வெறும்பு முட்டையின் நிறம் யாது?
1. வெள்ளை 2. சிவப்பு 3. கறுப்பு

39) சுவர் ஒன்றின் சமாந்தரத் தன்மையைப் பேணுவதற்குப் பயன்படும் உபகரணம்
1. தூக்குக் குண்டு 2. நீர்மட்டம் 3. சீவுளி

40) மரத்தில் உருவம் ஒன்றை செதுக்க உதவும் உபகரணம்
1. கைவாள் 2. உளி 3. சீவுளி

41) வயலில் சேற்றை மட்டப்படுத்த உதவும் உபகரணம்
1. கலப்பை 2. பரப்புப் பலகை 3. மண்வெட்டி

42) ஆடையில் மடிப்புக்கள் குலையாமல் இருக்க தற்காலிகமாக தைக்கும் தையல்
1. விஸ்பம் தையல் 2. சிறுநூலோடி 3. பெருநூலோடி

43) அரச ஆடைகள் விற்பனைக் கூட்டுத் தாபனம் எவ்வாறு அழைக்கப்படும்.
1. ஒசுசல 2. சலுசல 3. லக்சல

44) எள்ளில் அதிகம் உள்ள போசணைக்கூறு
1. விற்றமின் 2. மாப்பொருள் 3. கல்சியம்

45) அன்னாசிப் பிஞ்சை உண்பதால் ஏற்படக்கூடிய விளைவு
1. மயக்கம் ஏற்படல் 2. உடலில் தடிப்புக்கள் ஏற்படல் 3. உதடு வீங்குதல்

www.ikedu.lk

46) ஞாபகசக்திக்கு நாம் அதிகம் உண்ண வேண்டிய கீரை

1. அகத்தி 2. தூதுவளை 3. வல்லாரை

47) இயற்கை அனர்த்தம் தொடர்பாக அறிவிக்க அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்?

1. 1390 2. 117 3. 118

48) போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.

1. 1919 2. 1955 3. 1969

49) தொற்று நோய் பரவியுள்ள பிரதேசம் எந்த நிறத்தினால் குறித்துக் காட்டப்படும்.

1. பச்சை 2. சிவப்பு 3. மஞ்சள்

50) இலங்கையில் மண்சரிவு அபாயம் அற்ற மாகாணத்தில் ஒன்று
1. வடக்கு மாகாணம் 2. மத்திய மாகாணம் 3. சப்பிரகமுவா மாகாணம்

51) "வளூ" செய்தல் நிகழ்வுடன் தொடர்புடையோர்
1. தமிழர் 2. முஸ்லீம்கள் 3. சிங்களவர்

52) ஜின் கங்கை கடலோடு கலக்குமிடம்
1. காலி 2. மாத்தறை 3. கொழும்பு

53) இலங்கையில் அதிகமான நீர்வீழ்ச்சிகள் காணப்படும் மாகாணம்.
1. தென்மாகாணம் 2. வடமேல் மாகாணம் 3. ஊவா மாகாணம்.

54) நிலையான காந்தம் ஒன்றில் தென் திசையைச் குறிக்க பயன்படுத்தும் நிறம்
1. சிவப்பு 2. மஞ்சள் 3. நீலம்

55) அசையும் வண்ணத்துப்பூச்சி அமைப்பில் வண்ணத்துப்பூச்சி அசையக் காரணம்.
1. நூலும் காந்தமும் 2. காந்தமும் குண்டூசியும் 3. நூலும் குண்டூசியும்.

56) மின்குமிழ் ஒன்றில் ஒளிரும் இழை
1. தங்குதன் இழை 2. காபன் இழை 3. செப்பு இழை

57) பயிர்ச் செய்கையில் மாற்று முறை பயிர்ச் செய்கையை மேற்கொள்வதால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று
1. நீர் அதிகமாகத் தேவைப்படும்
2. வசதிக்கேற்ப இடமாற்றலாம்.
3. மண் கூடுதலாகத் தேவைப்படும்.

58) வீட்டு வேலியாக நடப்படும் தாவரத்தில் அடங்காதது.

1. கிளிசறியா 2. பூவரசு 3. வாழை

59) வீரவில துறைமுகம் அமைந்த மாகாணம்

1. மேல்மாகாணம் 2. கிழக்கு மாகாணம் 3. தென்மாகாணம்.

(15x2=30 புள்ளிகள்)

www.ikedu.lk